செ.வெ.எண். 23/நவம்பர் தேதி : 08.11.2016

# அனைத்து அரசு அலுவலக கட்டிடங்களிலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பை புணரமைத்தல் மற்றும் பராமரித்தல் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் மரு. ஜெயசந்திரபானுரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

எதிர் வரும் வடகிழக்கு பருவமழையை கருத்தில் கொண்டு தற்பொழுது தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசுக் கட்டடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உரிய முறையில் பராமரித்து அதனை நல்ல முறையில் செயல்படும் வகையில் பராமரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனைத்துத்துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும் மழைநீர் சேகரிப்பின் அவசியம், குடிநீர் பயன்பாடு தரம் மற்றும் நீர் ஆதாரங்களின் பராமரிப்பு பற்றியும், அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு செயல்பாடு குறித்து (Performance Certificate) சான்றுகளை eetwadrwsdpi@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு புகைப்படத்துடன் அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தலைமை பொறியாளர் திரு. மணிவண்ணன், கண்காணிப்பு பொறியாளர் திரு. இளங்கோவன், செயற்பொறியாளர் திரு. வெ. ரகுபதி, உதவி நிர்வாகப் பொறியாளர்கள், மற்றும் நில நீர் வல்லுநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.